# DEPOSITION OF WITNESS

## (Chapter XXIII Code of Criminal Procedure)

------

## IN THE COURT OF THE ASSISTANT SESSIONS JUDGE, UTHANGARAI

### Calendar Case No. 01 of 2024

**Deposition of witness for** : PW3

**Name** : முனியம்மாள்

**Father's Name** : திருப்பதி

**Village** : வேலம்பட்டி

**Taluk** : போச்சம்பள்ளி

**Calling** : கூலி வேலை

**Age** : 45

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 04th day of July 2025.**

எதிரிகள் ஆஜர் .

முதல் விசாரணை:

அ.சா. 1 மற்றும் அ.சா.2 யை தெரியும். எதிரிகளை தெரியும். 06.05.2022 ம் தேதி எங்கள் இடத்திற்கும் எதிரிகள் இடத்திற்கும் இடையே நடந்து செல்லும்போது ஏற்பட்ட சண்டையில் காயம்பட்ட எனது அண்ணன் கருணாநிதி அண்ணி ராணி, இராஜேஷ்வரி ஆகியோர்களை பார்ப்பதற்காக காவேரிபட்டிணம் அரசு மருத்துவமனைக்கு சென்றேன். அங்கு ஆஜர் எதிரிகளும் மற்றும் முகம் தெரியாத நபர்கள் ஆக மொத்தம் 20 பேர் அங்கு வந்து பழனி, ரகுபதி, ரமணி, கவிதா, சரசு, ராஜ்குமார் ஆகியோர்கள் அங்கு இருந்தார்கள். இராஜ்குமார் கையில் என்ன வைத்திருந்தார் என்று தெரியவில்லை கையால் அடித்ததில் எனது வலது கண் கருவிழி உடைந்து வெளியே வந்துவிட்டது. எனது உடன் வந்த பழனி என்பவரையும்

பிடித்து அடித்துவிட்டார்கள். அருகில் இருந்த போலீசார் அங்கு வந்துவிட்டார்கள். மருத்துவர் என்னை பரிசோதித்து கண் உடைந்துவிட்டதால் மருத்துவம் பார்க்கமுடியாது என்று சொல்லி ஆம்புலன்ஸ் மூலம் கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவிட்டார்கள் . மேல் சிகிச்சைக்காக சென்னை செல்லும்மாறு சொன்னார்கள். நான் கோயம்பத்தூர் அரவிந் மருத்துவமனைக்கு சென்றேன். அங்கு எனக்கு அறுவைசிகிச்சை செய்தார்கள். 7 நாட்கள் சிகிச்சையில் இருந்தேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்குவிசாரணை

கருணாநிதி என் உடன் பிறந்த அண்ணணா என்றால் பெரியப்பா மகன் ஆவார். என்னை எந்த ஊரில் திருமணம் செய்து கொடுத்தார்கள் என்றால் தோப்பூரில் திருமணம் செய்து கொடுத்தார்கள். என்து அம்மாவிற்கு நான் மட்டும் வாரிசு என்பதால் எனது அம்மாவுடன் வேலம்பட்டியில் உள்ளேன். தோப்பூரில் இருந்து எத்தனை ஆண்டுகளுக்கு முன்பு வந்தேன் என்றால் திருமணம் ஆனதில் இருந்து வேலம்பட்டியில் கணவருடன் குடியிருந்து வருகிறேன். கருணாநிதி எனது அண்ணான் பெயிப்பா மகன் எனது கூறுவது வழக்கிற்காக கூறுகிறேன் என்றால் சரியல்ல. எனது அப்பாவும் கருணாநிதி அப்பாவும் உடன் பிறந்தவர்கள். நான் காவேரிபட்டிணம் மருத்துவமனையில் இருப்பவரை பார்பதற்காக சென்றதாக கூறுவது பொய் என்றால் சரியல்ல. கருணாநிதி விஜயகுமாரை வெட்டும்போது நான் உடண் இருந்தேன் என்றாலும் அதில் இருந்து தப்பிப்பதற்காக கண் கரு வெளியே வந்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. கருணாநிதி குடும்பத்தாருக்கும் கிருஷ்ணன் குடும்பத்தாருக்கும் வழிபிரச்சனை சம்மந்தமாக முன் விரோதம் இருந்து வருகிறது என்றால் சரியல்ல. அது பொய்யாகும். கருணாநிதி வகையாரக்கள் அவர்கள் வழியாகத்தான் சென்று கொண்டுயிருக்கிறார்கள் என்றாலும் கிருஷ்ணன் குடும்பத்தார்கள் அந்த வழியில் செல்லும் போது தடுப்பதால் தான் முன் விரோதம் இருந்து வருகிறது என்றால் சரியல்ல. காவேரிபட்டிணம் மருத்துவமனையில் எதிரிகள் உட்பட 20 வந்ததாக கூறுவது வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. விஜயகுமாரை தவிர சம்பவ இடத்தில் யாரும் இல்லை என்றால் சரியல்ல. காவேரிபட்டிணம் மருத்துவமனையில் என்னை தக்கியதாக கூறுவது என் அண்ணனை காப்பாற்ற பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. நான் காவேரிபட்டிணம் மருத்துவமனையில் சென்று பார்த்தபோது விஜயகுமார் மட்டும் தான் இரத்த வெள்ளத்தில் இருந்தார் என்றாலும் மற்ற நபர்கள் யாரும் அங்கு இல்லை என்றால் அது பொய்யாகும்.

விஜயகுமாரை காவேரிபட்டிணம் மருத்துவமனையில் இருந்து கிருஷ்ணகிரி மருத்துவமனைக்கு சென்ற பின்பு தான் ஆஜர் எதிரிகள் சென்று பார்த்தார்கள் என்றாலும் காவேரிபட்டிணம் மருத்துவமனையில் அவர்கள் வரவில்லை என்றாலும் சரியல்ல. விஜயகுமார் மிகவும் காயம் பட்டு இருந்ததால் அவரை பெங்களூர் மருத்துவமனைக்கு அழைத்து செல்லதான் எதிரிகள் கிருஷ்ணகிரி மருத்துவமனைக்கு வந்தார்கள் என்றால் சரியல்ல. வழக்கிற்கும் எதிரிகளுக்கும் எந்த சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. எனக்கு 45 வயது ஆகியதால் தான் கண் புரை எடுப்பதற்காக தான் அரவிந் மருத்துவமனைக்கு சென்றேன் என்றால் சரியல்ல. மேற்படி விஜயகுமாரை தாக்கிய வழக்கில் இருந்து தப்பிப்பதற்காக தான் எதிரிகள் மீது பொய்யா புகார் கொடுத்ததின் பேரில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஓம்/- திரு.பா. திருஞானசம்பந்தம். பி.ஏ., பி,எல்.,
சார்பு நீதிபதி,
ஊத்தங்கரை.